1971 டிசம்பர் 16]

Employment opportunities to Graduate Engineers

*471. Q.—Dr. H. V. HANDE: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether it is a fact that the Government has announced a plan to provide interim employment opportunity to 600 unemployed Graduate Engineers;

(b) if so, the details thereof; and

(c) the number of persons employed as on 31st March 1971.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) ஆம்.

(இ) அரசின் பல்வேறு துறைகளின் கீழ் 600 பொறியியல் பட்டதாரிகளுக்கு பயிற்சி அளிக்கும் திட்டம் ஒன்றை 16-10-1970-ம் நாளிட்ட (தொழிலாளர் நலன்) 1546-ம் எண் ஆணையின்படி, அரசு கொண்டு வந்துள்ளது. இத்திட்டம் இரண்டு ஆண்டு காலத்திற்குச் செயலில் இருக்கும். பொறியியல் பட்டதாரிகளுக்கு மாதம் ஒன்றுக்கு வழங்கப்படும் உதவித் தொகை ரூ. 250 ஆக இருக்கும்.

(உ) நியமன ஆணைகள் வழங்கப்பெற்ற 236 பொறியியல் பட்டதாரிகளுள் 31-3-1971-ஆம் நாள்வரை 78 பொறியியல் பட்டதாரிகள் பயிற்சியில் சேர்ந்துள்ளனர்.

Dr. H. V. HANDE: From the answer I understand that only 78 persons have been employed till 31st March 1971. May I know, Sir, whether during the last nine months more persons have been taken and after this one or two years' training whether any provision will be made by the Government for them to be sent to other departments for higher pay regularising their job? May I know whether the Government has got such a system and if so, may I know the details thereof?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: அரசாங்கம் 600 பேருக்கு 250 ரூபாய் கொடுப்பது என்று முடிவு செய்திருந்தாலும் இதைத் தேர்ந்தெடுக்கின்ற குழு எல்லா இஞ்சினியர்களையும் சேர்த்து வைத்திருந்தார்கள். அதில் 236 பேர் வந்தார்கள். பயிற்சியில் இது வரை 78 பேர்தான் சேர்ந்திருக்கிறார்கள். ஆகவே, இதை மாற்றி அந்தந்தத் தலைமைப் பொறியாளர்களே அவர்களுடைய இலாகாவுக்கு எப்போதைக்கெப்போது ஆட்கள் தேவைப் படுகிறார்களோ அப்போதெல்லாம் இந்தப் பயிற்சிக்காக எடுத்துக் கொள்ளலாம் என்ற முடிவை நம்முடைய அரசாங்கம் தெரிவித்திருக்கிறது. இதற்குப் பின்னால் எண்ணிக்கை அதிகப் படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. பயிற்சி பெற்றவர்களுக்கு பின்னர் நிரந்தரமாக எடுக்கும்போது இவர்களுக்கு முதல் வாய்ப்பைக் கொடுக்கலாமா என்பதைப் பற்றியும் அரசு ஆலோசித்து வருகிறது.

[1971 டிசம்பர் 16

திரு. ஏ. சுப்பிரமணியம்: மத்திய அரசு பட்டம் பெற்றவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்க 25 கோடி ரூபாய்த் திட்டம் அறிவித்ததே அந்தப் பணத்தில் தமிழக அரசுக்குப் பங்கு கிடைத்ததா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: நமக்குப் பங்கு என்பது இல்லை. அவர்களே அந்தத் திட்டத்தை நிறைவேற்றுகிறார்கள். நம்முடைய மாநிலத்தில் எவ்வளவு என்ற விவரம் இல்லை.

திரு. கா. காளிமுத்து : பொறி இயல் பட்டதாரிகளுக்கு வழங்கப்படுகின்ற இடைக்கால வேலை வாய்ப்புத் திட்டத்தைப் போல் ஏனைய பட்டதாரிகளுக்கும் வழங்க அரசிடம் செயற் குறிப்பு இருக்கிறதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இது போன்ற ஐ.டி.ஐ-ல் படித்தவர்கள், பாலிடெக்னிக்கில் படித்தவர்களுக்குத் தனியாகக் கடன் கொடுத்து எந்த அளவுக்குப் புதிய தொழில்களை ஏற்படுத்தலாம் என்ற திட்டமும் பரிசீலிக்கப்பட்டு ஆயிரம் ரூபாய் கொடுக்கலாம் என்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

வாலிநோக்கத்தில் உப்புத் தொழிற்சாலை

* 472 வினா—**திரு. எஸ். காதர் பாஷா என்கிற வெள்ளைச்சாமி :** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், முதுகுளத்தூர் வட்டம் வாலிநோக்கம் என்னுமிடத்தில் புதிய உப்பு தொழிற்சாலை ஆரம்பிக்கும் திட்டம் அரசு பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் என்றால், அத்திட்டம் எப்பொழுது செயல்படும்?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) & (இ) வாலிநோக்கம் உட்படும் மாரியூர் தரிசை ஒரு புதிய உப்புத் தொழிற்சாலையாக விருத்தி செய்யும் திட்டமொன்று உள்ளது. அங்குள்ள உப்பு நீரின் தகுதியையும், நிலத்தின் தன்மையையும் பற்றி பரிசோதனை செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அதன் முடிவு தெரிந்தவுடன் அங்கு உப்பு உற்பத்தி தொழிற்சாலை அமைப்பது பற்றி முடிவு செய்யப்படும்.

திரு. எஸ். காதர் பாட்சா என்கிற வெள்ளைச்சாமி : முதுகளத்தூர் வட்டத்தில் எந்தவிதத் தொழில்களும் இல்லை யென்பதை அரசு அறிந்திருக்கிறது. இந்த உப்புத் தொழிலைத் துரிதமாக செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இந்தத் திட்டம் அந்தப் பகுதி மக்களுக்கு நல்ல வேலை வாய்ப்பைத் தரும். இதன் மூலம் ஆண்டு ஒன்றுக்கு இரண்டரை லட்சம் டன் வரை உப்பு உற்பத்தி செய்ய வாய்ப்பு இருக்கிறது. இந்தத் திட்டத்திற்குச் சுமார் 55 லட்சம் ரூபாய் வரை ஆகலாம் என்று கருதப்படுகிறது.